பொத்துவில் பிரதேச சபை

அம்பாறை மாவட்டம்

--------------------------------

1. நிதிக்கூற்றுகள்

------------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 20 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 29 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------

இந்த அறிக்கையில் 1..3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொத்துவில் பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுகளின் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

---------------------------------------------------------------------------------------------------------

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 27 ஜனவரி 2014 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

மீளாய்வாண்டில் யுநெப்ஸ் (UNOPS) நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட 13 அலுவலக உபகாரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்
-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) வாடகைகக்கு கடைகளைப் பெற்றுக்கொண்ட 71 நபர்களிடமிருந்து ரூபா 2,316,441 நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு 2014 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற நான்கு உத்தியோகத்தினரது கடன் நிலுவை ரூபா 435,683 தொகையை அவர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்ற நிறுவனங்களிலிருந்து அறவிடுவதற்கு 2014 ஏப்ரல் 04 வரை ஆந் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை
-----------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு<br>-------------------------------------- | இணக்கமின்மை<br>------------------------------------------ |
|---|---|
| (அ) கிழக்கு மாகாண நிதி ஒழுங்கு விதி இலக்கம் 432(1) | 2013 ஆம் ஆண்டு இரு வாகனங்களின் திருத்தத்திற்காக ரூபா 183,182 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2014 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை வாகன சம்பவ குறிப்பு புத்தகத்தில் அவை பதியப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்<br>------------------------------------------ | |
| (i) நி.பி 135 | அனுமதியளித்தல், சான்றுதிப்படுத்தல் போன்ற கடமைகள் உத்தியோகத்தர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படவேண்டிய போதிலும், ரூபா 2,857,483 கூட்டுத் தொகையான 70 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் தொடர்பாக அனுமதியளித்தல் மற்றும் சான்றுறுதிப்படுத்தல் செயற்பாடுகளை சபையின் தவிசாளரே செய்துள்ளார். |

| | | |
|---|---|---|
| (ii) | நி.பி 571(2) | ரூபா 71,600 தொகையான காலங்கடந்த வைப்புகளை உரிய நபர்களுக்கு செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றம் செய்வதற்கு 2014 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் பிஎப்/437 | வாகனங்களின் காப்புறுதி தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியிடமிருந்து அல்லது வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திடமிருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ளவேண்டிய போதிலும் இதற்கு முரணாக மூன்று வாகனங்களுக்கான காப்புறுதி பத்திரமானது தனியார் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து ரூபா 250,398 தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,575,692 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,850,025 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 3,425,717 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 நீதிமன்ற தண்டப்பணம்

2013 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணத்தினை கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 ஏனைய வருமானம்

அதிகாரசபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 03 விளம்பரப் பதாதைகளுக்காகவும் தொலைத் தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 07 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காகவும் மீளாய்வாண்டிற்காக அறவிடவேண்டிய அண்ணளவாக ரூபா.84,000 தொகையான வருமானத்தை சபை இழக்கவேண்டி ஏற்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு இறுதி வரை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா.2,422,520 தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு 2014 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

சபையினால் 2008 ஆம் ஆண்டு ரூபா 731,600 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட பேப்பர் மீள் சுழற்சி இயந்திரமானது உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 2014 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாது இருந்தது.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்.

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளுராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ளவேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளுராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ள ககணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமை மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமானச்சேகரிப்பு